தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.01.2020

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு 2019ம் ஆண்டுக்கான ஹரித் ரத்னா விருது**

அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தின் 5வது தேசிய அளவிலான இளைஞர் மாநாடு ''அடுத்த தலைமுறை வேளாண் கண்டுபிடிப்புகள் : வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் நிலையான வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள்'' என்ற தலைப்பில் ஜனவரி 20, 21 ஆகிய இரண்டு நாட்கள் ராய்பூர் இந்திராகாந்தி க்ரிஷி விஷ்வவித்யாலயாவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கைலக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார் அவர்களுக்கு 2019-ம் ஆண்டுக்கான ஹரித் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விருதானது, வேளாண் தொழில்முனைவோர் திட்டத்தில் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.30 கோடி அளவிலான திட்ட நிதி பெற்றது, திரவ உர மேலாண்மையில் பங்களிப்பு, துல்லிய பண்ணைத் திட்டம், மா அடர் நடவு முறை செயல் விளக்கத் திடல் மூலம் விவசாயிகளின் வருமான உயர்வுக்கு வழிவகை செய்தது போன்றவற்றின் மூலம் மாணவர்களுக்கு வேளாண்மையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், மாணவ சமுதாயத்தை விவசாயத்தில் ஈடுபட ஊக்குவிக்கும் வகையில் முன்னுதாரணமாக விளங்கியதற்காக வழங்கப்பட்டது.

மேலும் மாணவர்களை வெளி மாநில மற்றும் வெளி நாட்டு கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி அவர்களின் ஆராய்ச்சி மற்றும் கல்வி நடைமுறைகளை தெரிந்து கொள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளார்.

தோட்டக்கலை துறையில் இவருடைய பங்களிப்புக்காக 5 முறை துறை சார்ந்த விருதுகளும், 7 முறை தேசிய அளவிலான விருதுகளும் பல்வேறு அமைப்புகளால் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கல்லூரிகளுக்கான அங்கீகாரம் வழங்கும் குழுவிலும் உறுப்பினராக உள்ளார். 8 புத்தகங்கள், 14 புத்தக அத்தியாயங்கள், தேசிய மற்றும் இந்திய அளவிலான 130க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை பல்வேறு பத்திரிக்கைகள் மற்றும் வெளியீடுகளில் வெளியிட்டுள்ளார். தற்போது, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியின் வளர்ச்சியில் பங்காற்றும் விதமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தராக செயல்பட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் தொடர்பு அலுவலர்